# காலம்தோறும் கரப்பான்பூச்சிகள் !

ஒரு மாமாங்க காலமாக இந்திய ஒன்றியத்தை ஆட்சி செய்து வரும் பா.ஜ.க. அரசின் திசைத்திருப்பல் முயற்சிகளை முழுமையாக முறியடித்து, தங்கள் கோரிக்கைக்குப் பணிய வைத்திருக்கிறார்கள் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர். 'நீட்' தேர்வு மோசடிகளுக்கு எதிரான அவர்களின் போராட்டத்திற்கு தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகளின் ஆதரவும், பல்வேறு அமைப்புகளின் உறுதுணையும் கிடைத்ததுடன், இந்தியாவின் இளைஞர்களும் மாணவர்களும் எவ்வித பேதமுமின்றிப் போராட்டத்தை ஆதரித்த தன் விளைவே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலக நேரிட்டது.

பா.ஜ.க அரசு தனக்கு எதிரான எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதை எந்தெந்த வகையில் எல்லாம் திசைத் திருப்ப முயற்சிக்கும் என்பதை டெல்லி ஜந்தர்மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் முன்னெடுத்த இளைய தலைமுறையின் போராட்டத்தில் பங்குகொண்டு உரையாற்றிய தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி விளக்கமாக எடுத்துரைத்தார்.

**மக்களின் பக்கம் நின்று அரசுக்கு எதிராகப் போராடுபவர்களைத் 'தேச விரோதிகள்', 'அர்பன் நக்சல்கள்', 'வெளிநாட்டுக் கைக்கூலிகள்' என்று பழி போட்டு திசைத் திருப்புவது ஒன்றிய பா.ஜ.க அரசின் வழக்கமாக இருப்பதை கனிமொழி கருணாநிதி எம்.பி. அந்தக் கூட்டத்தில் தெரிவித்தார். டெல்லியில் நடந்த போராட்டத்தையும் இப்படித்தான் பா.ஜ.க. வர்ணித்தது. ஏற்கனவே, இதே டெல்லியில் விவசாயிகள் மாதக் கணக்கில் போராடிய போது, அவர்களை 'காலிஸ்தான் தீவிரவாதிகள்' என்று முத்திரை குத்தியது.**

**மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையைப் பறிக்கும், தொகுதி மறுவரையரை சட்டமுன்வடிவை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து நாடாளுமன்றத்தில் தோற்கடித்தபோது, "பெண்களுக்கான நாடாளுமன்ற - சட்டமன்ற தொகுதி ஒதுக்கீட்டைத் தடுக்கிறார்கள்" என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு திசை திருப்பியது. ஜந்தர் மந்தரில் நடந்த போராட்டத்தின் வலிமையால் பதவி விலகிய தர்மேந்திர பிரதானும்கூட, "போராட்டத்தை தேசவிரோதிகள் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது" என்று தனது ராஜினாமாவுக்கான காரணத்தில் குறிப்பிட்டிருந்தார்.**

இத்தகைய பழித்தூற்றல்கள், திசைத் திருப்பல்கள் எல்லாவற்றையும் மீறித்தான் கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரும் அவர்களை ஆதரித்து உறுதியாக நின்றவர்களும் ஒன்றிய பா.ஜ.க அரசைப் பணியச் செய்திருக்கிறார்கள். இணையதளம் முடக்கம், காவல்துறையும் துணை ராணுவமும் இணைந்து நடத்திய கொடூரத் தாக்குதல், தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என்ற பா.ஜ.க. அரசின் மிரட்டல்கள் எதுவும் ஜந்தர் மந்தர் ஜனநாயகப் போராளிகளிடம் எடுபடவில்லை. 'நீட்' தேர்வு மோசடிகளுக்குக் காரணமான அமைச்சர் பதவி விலக வேண்டும் என்பதில் சமரசம் காட்டாமல் நின்று, நினைத்ததை சாதித்திருக்கிறார்கள். இது ஜனநாயகக் களத்தில் மோடி அரசுக்கான முதல் வெளிப்படையான வீழ்ச்சி என்று அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் போராட்டத்தில் வெளிப்பட்ட கோபம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் மீது மட்டுமல்ல, அந்த அரசின் ஊதுகுழல்களாகவேசெயல்படும்ஊடகத்தினர்மீதும்தான். இந்தியாவில் பிரபலமாக உள்ள பெரும்பாலான ஊடகங்கள் பா.ஜ.க.வின் குரலாகவே ஒலிப்பதை இளைஞர்கள் மிகச் சரியாகவே கவனித்து வந்துள்ளனர். பிரபலமான தொலைக்காட்சி ஊடகத்தினரை நோக்கி சரமாரியான கேள்விகளை எழுப்பினார்கள்.

**12 ஆண்டுகளாக ஒன்றிய அரசுக்கு சாதகமான கேள்விகளைக் கேட்டே பழக்கப்பட்டிருந்த 'கோடி மீடியா' எனப்படும் இந்தியாவின் தொலைக்காட்சி சேனல்களின் செய்தியாளர்கள், டெல்லியில் திரண்ட ஜென்ஸி தலைமுறையினரின் கூர்மையானக் கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் திணறினர். ஊடக ஆட்களுக்கு எதிரான கண்டன முழக்கங்களை இளையதலைமுறையினர் தொடர்ந்து எழுப்பினர். பாரபட்சமாக செயல்படும் ஊடகத்தை நோக்கிய விமர்சனங்கள் சுவர் எழுத்துகளிலும், சுவரொட்டிகளிலும் வெளிப்பட்டன.**

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் முன்னெடுத்த போராட்டத்தில் மட்டுமல்ல, பல்வேறு காலகட்டங்களில் இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களிலும் ஊடகத்தினரின் பாரபட்சமான அணுகுமுறை தொடர்ந்தது என்பதுதான் ஊடக வரலாறு. அரசியல்களத்திற்கு கரப்பான்பூச்சிகள் என்பவை புதிதல்ல. காலந்தோறும் கரப்பான்பூச்சிகள் வேறு வேறு வடிவங்களில் வெளிப்பட்டே வந்திருக்கின்றன. வேலையற்ற இளைஞர்களை கரப்பான்பூச்சிகளுடன் ஒப்பிட்டு உச்சநீதிமன்றம் விமர்சனக் கருத்தை வெளிப்படுத்தியதால்தான், கரப்பான்பூச்சி பெயரிலேயே கட்சி உருவாகும் நிலை தற்போது உருவானது.

**இளைஞர்கள் வேலையற்றவர்களாக இருப்பதற்கு அவர்கள் மீது பழிபோடாமல் அரசும் சமூகமுமே முதன்மை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அதனால்தான், 'சாலையோரத்திலே வேலையற்றதுகள்..வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள். அதுதான் காலத்தின் குறி' என்று எழுதினார் பேறறிஞர் அண்ணா. காலம் காட்டிய குறியைக் கண்டுணர்ந்த அண்ணா, வேலையற்றவர்களாய் இருந்த இளைஞர்களை இழித்துப் பேசவில்லை. இலட்சிய வரலாறு படைத்திட அவர்களை ஒருங்கிணைத்தார். இயக்கத்தைக் கட்டமைத்தார். தி.மு.க. தொடங்கிய**



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

**போது உருவான இளைஞர் பட்டாளமே அன்றைய கரப்பான்பூச்சிகள்.**

**தி.மு.க. மாணவர் இளைஞர் பட்டாளம் கரப்பான்பூச்சிகளாகக் களமிறங்கியது. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியது. உயிர்த் தியாகம் செய்தது. சிறைவாசம் கண்டது. உறுதியாக நின்றது. அதன் விளைவாகத்தான், இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி என்கிற ஆதிக்கம் தகர்ந்து, ஆங்கிலமும் இணை ஆட்சிமொழியாக நீடிக்கும் என்கிற நிலை உருவானது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மொழிகளுக்கும் பாதுகாப்பு அரணாக நின்ற தி.மு.க.வுக்கும் திராவிட இயக்கத்திற்கும் அப்போதும் டெல்லி சூட்டிய பட்டங்கள், 'தேசவிரோதிகள்', 'பிரிவினைவாதிகள்', 'இந்தியாவின் எதிரிகள்' என்பவைதான்.**

அன்றும் அரசாங்கத்தின் பார்வையின் படியே ஊடகங்களான பத்திரிகைகளின் குரல்கள் ஒலித்தன. தமிழ்நாட்டில் பிழைப்பு நடத்திய ஆரிய ஏடுகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் தி.மு.க.வுக்கு எதிரானக் கருத்துகளை விதைப்பதையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தன. அன்றைய கரப்பான்பூச்சிகளின் தலைவரான நம் பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டுப் பத்திரிகைகளின் உண்மை முகத்தை தன் சொல்லாலும் எழுத்தாலும் அம்பலப்படுத்தினார்.

"பத்திரிகைகள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம். திடீரென்று ஒருநாள் 'அண்ணாதுரை செத்துவிட்டான்' என்று பத்திரிகையிலே செய்தி போட்டுவிடலாம். பிறகு, நான் ஒவ்வோர் ஊராகச் சென்று 'நான் சாகவில்லை. இதோ இருக்கிறேன்' என்று காட்ட வேண்டும். அப்படி காட்டிய பிறகும், பத்திரிகைகள்,, 'அண்ணாதுரை செத்துவிட்டது உண்மைதான். செத்தபிறகு பிசாசாக மாறி வந்திருக்கிறான் எனப் பேசப்படுகிறது' என்று எழுதும். இந்த வித்தை எனக்குத் தெரியாததல்ல. நானும் அந்தப் பத்திரிகையாளர்கள் இனத்தில் வந்தவன்தான். இந்த முறை, பழைய முறையாகும். எனவே இந்த வித்தை செய்வது சுலபம். வேறு வேலை எனக்கு இருப்பதால் இன்று சிலர் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். அவர்கள் வாழட்டும்" என்று ஊடகத்தினரை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார் த்பேரறிஞர் அண்ணா.

இதே கருத்தை **தந்தை பெரியார், "பத்திரிகைகாரர்கள் மனது வைத்தால் நாட்டைத் திருத்தலாம். மேல்நிலைக்கும் கொண்டு வரலாம். ஆனால், இந்த நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறரால் நடத்தப்படுகிறது" என்று சொன்னதுடன், தனது இயக்கத்தின் கருத்தைப் பரப்புவதற்காக குடி அரசு இதழைத் தொடங்கினார். பேரறிஞர் அண்ணா, 'திராவிட நாடு' பத்திரிகையை நடத்தினார். அவர்கள் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் முரசொலியாக முழங்கினார்.**

1991ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தி.மு.கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை குறித்து, தினமணி நாளேடு எழுதிய தலையங்கத்தின் தலைப்பு, "சிரிப்பதா? அழுவதா?" என்பதாகும். கலைஞர் தனது தலைமையில் கட்டிக்காத்த தி.மு.க.வையும் ஜெயலலிதா அவர்களின் அ.தி.மு.க.வையும் ஒரே மாதிரியான இயக்கங்கள் போல சித்தரித்த தினமணியின் எள்ளல் மிகுந்த தலையங்கத்திற்கு எதிராக கலைஞரின் முரசொலி சீறி எழுந்தது.

**முரசொலியில் 2941991 அன்று கலைஞர் எழுதினார், "தினமணியார் ஏளனமும் ஏகடியமும் புரிவது போல இது எளியோர் இயக்கமாகக்கூட இருக்கலாம். நாம் எலிகளாகக் கூட இருக்கட்டுமே? எலிகள் இயக்கத்திற்கு இங்கே ஒரு எலிதானே தலைமை. அங்கே பூனையின் தலைமையில் அல்லவா எலிகளின் இயக்கம் இருக்கிறது"**

பிரபல ஏடுகள் எப்படியெல்லாம் தி.மு.க.வுக்கு எதிரான வேலைகளைச் செய்கின்றன என்பதையும், மண்டல் கமிஷன் அறிக்கையின்படி, இதர பிற்படுத்தப்பட்டோ ருக்கான 27% இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த தி.மு.க. எடுத்த முயற்சிகளால் ஆரிய ஏடுகள் எப்படியெல்லாம் செய்திகளைத் திரித்து வெளியிட்டு, தி.மு.க.வுக்கு எதிராகச் செயல்படுகின்றன என்பதையும் 'முரசொலி'யில் கலைஞர் விளக்கியிருந்தார். நம் கழகத் தலைவர் - திராவிட நாயகர் அவர்கள் ஆட்சிக்காலத்திலும், 'மற்றவர்களுக்குக் கிடைக்கும் ஊடக சொகுசு தி.மு.க.வுக்கு ஒருபோதும் கிடையாது" என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்திய அளவில் ஊடக சொகுசு பா.ஜ.க அரசுக்கு இருக்கிறது. மக்களுக்கான இயக்கங்களுக்கு அந்த சொகுசு கிடையாது. இதை கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் வெளிப்படையான விமர்சனங்களால் ஊடகத்தினருக்கு உணர்த்தியிருக்கின்றனர். பிரபல ஊடகங்களின் தயவை நாடாமல், சமூக வலைதள ஊடகங்களை முன்னெடுத்து, போராட்டக் களத்தை ஒருங்கிணைத்து, தங்கள் கோரிக்கையில் வெற்றி பெற்றுள்ளனர். நீட் தேர்வு அறவே ஒழிக்கப்படும்போதுதான் முழுமையான நன்மை கிடைக்கும் என்பதை இளையதலைமுறை உணர்ந்து கொள்ளும் காலம் விரைவில் வரும்.

**ஊடக சொகுசு இல்லாத திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அன்றைய கரப்பான்பூச்சிகளான நம் இயக்க முன்னோடிகள் பலரும் சொந்த செலவில் ஆளுக்கொரு பத்திரிகை நடத்தி அவற்றை தமிழ்நாடெங்கும் கொண்டு சேர்த்தனர். இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் கழகத்தின் இளையதலைமுறை கையிலெடுக்க வேண்டிய கருத்தாயுதம் சமூக வலைதளங்கள்தான். இன்ஸ்டாகிராம், ஷேர்சாட், யூடியூப், எக்ஸ், ஃபேஸ்புக் உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் ஒவ்வொருவரும் களமாட வேண்டிய அவசியத்தை காலம் உருவாக்கியிருக்கிறது.**

தி.மு.க.வின் இளம் தலைமுறை அதை உணர்ந்திருப்பதை அவர்களின் செயல்களின் மூலமாகக் காண முடிகிறது. நம்பிக்கை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

---

### சோளிங்கரில் கடைக்குள் புகுந்து அராஜகம்!

## செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்திய த.வெ.க. எம்.எல்.ஏ.,!

### சென்னை பத்திரிகையாளர் சங்கம் கடும் கண்டனம்!

*ராணிப்பேட்டை, ஜூலை 29-*

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கரில் ஒரு கடைக்குள் புகுந்து ஒரு சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதைக் கண்ட தினமலர் செய்தியாளர் கல்யாண சுந்தரம் மற்றும் தினகரன் செய்தியாளர் அரங்கநாதன் அதை படம் பிடித்துள்ளனர்.

அப்போது தாக்குதலில் ஈடுபட்ட தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் கபில் மற்றும் அவருடன் வந்த நபர்கள் ஊடகங்களின் செய்தியாளர்களை மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளனர்.

மேலும் அவர்கள் சிறைவைக்கப்பட்ட நிகழ்வு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. பத்திரிகையாளர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கிய சம்பவம், சோளிங்கர் உதவி காவல் ஆய்வாளர் முனீர் பாஷா முன்னிலையிலேயே நடைபெற்றதாகக் கூறப்படும் நிலையில், தாக்குதலைத் தடுக்கவோ, செய்தியாளர்களுக்கு உடனடி பாதுகாப்பு வழங்கவோ அவர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மக்களாட்சியின் நான்கு தூண்களில் ஒன்றாக விளங்கும் ஊடகத் துறையினர், தங்கள் கடமையைச் செய்யும்போது அதிகார பலத்தாலும், ஆள் பலத்தாலும் ஒடுக்க நினைப்பது சகித்துக் கொள்ள முடியாத அராஜகம். பத்திரிகையாளர்களைச் சிறை வைத்து, கொலைவெறி தாக்குதல் நடத்திய எம்.எல்.ஏ., கபில் மற்றும் அவரது ஆதரவாளர்களைக் காவல் துறை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் இத்தகைய வன்முறையில் ஈடுபட்டதை த.வெ.க. தலைமை சாதாரணமாகக் கடந்து விடக் கூடாது. தவறிழைத்த எம்.எல்.ஏ., மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் உடனடியாகக் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படும் பட்சத்தில், ஜனநாயகம் தன் மாண்பை இழந்துவிடும். எனவே, தமிழ்நாட்டில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்.

ஊடகச் சுதந்திரத்தை அச்சுறுத்தும் எந்தவொரு வன்முறையையும் சென்னை பத்திரிகையாளர் சங்கம்(MUJ) ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்பதை உறுதிபட தெரிவித்துக்கொள்கிறோம்.

---

### ஜோதிடர்களின் ஆலோசனை : வாஸ்து முறைப்படி

## அமைச்சர் ரமேஷ் அறை புனரமைப்பு!

### தலைமை செயலகத்தில் விதிகளை மீறி பணிகள்!

*சென்னை, ஜூலை 28-*

தலைமைச் செயலகத்தில், கோட்டை பாரம்பரிய கட்டடத்தில், ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேசுக்கு அறை ஒதுக்கப்பட்டு உள்ளது. தி.மு.க., ஆட்சியில், 2024ம்ஆண்டு, புதிய மின் விளக்கு, சோபா, நாற்காலி, மேஜை, ஏ.சி., உள் ளிட்ட வசதிகளுடன், ஒரு கோடி ரூபாய் செலவில் பொதுப்பணித் துறையினர், அந்த அறையை புனரமைத்து இருந்தனர்.

தற்போது, அறையை மீண்டும் புனரமைக்கும் பணியில், பொதுப்பணித் துறையினர் இறங்கியுள்ளனர். இதற்காக, அறையில் இருந்த மின்விளக்குகள், பிளைவுட், செயற்கை மேற்கூரை, மின்சாதன பொருட்கள், ஏ.சி., உள்ளிட்ட அனைத்தும் அகற்றப்பட்டு உள்ளன. பழனி கோவில் நில விவகார சர்ச்சையில் அமைச்சர் ரமேஷ் பெயர் அடிபட்டதற்கு, அறையில் உள்ள வாஸ்து அமைப்புகள் சரியில்லாததுதான் காரணம் என, ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பிரச்சினைகள் வராமல் இருக்க, அறையை வாஸ்துபடி புனரமைத்து, மேஜை, நாற்காலி உள்ளிட்டவற்றை, திசை பார்த்து போட, ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது. அதன்படி புனரமைப்பு பணிகள் துவங்கி, முழு வீச்சில் நடந்து வருகிறது.



ஆனால், இதுபோன்ற பணிகளை செய்வதற்கு முன்பு, பொதுப்பணித் துறை வாயிலாக, பராமரிப்பு பணி ஒப்பந்தம் கோரவேண்டும். அதன்பின்தான் பணிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால், விதிகளை மீறி, அமைச்சர் அறையில் புனரமைப்பு பணிகள் நடப்பது, தலைமைச் செயலகத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## மாற்றம்...!



**விடியலை**
விரும்பாத
இருட்டு த.வெ.க.

மகளிர்
பயணம் என
மாற்றியது...

"நான் முதல்வன்"
எனும்
நம்பிக்கையூட்டும்
பதத்தை

கோட்டுமாடல்
சர்க்கார்
"திறன் தமிழ்நாடு"
என திருத்தியது...

முருகனின்
முதல் படைவீட்டு
சொத்தை
அடிமாட்டு
விலைக்கு
பாதாள

பைரவிகளுக்கு
பத்திரம் செய்து
மாற்றியது...

அந்த வரிசையில்

வலிமை மீது
வைக்காத
நம்பிக்கையை

**வாஸ்து மீது**
**கொண்டு**
**அலையும்**
**குஜிலி மஸ்து**
**கூட்டம்**

**முதலமைச்சர்**
**அறையை**

**வேறொரு**
**கட்டிடத்துக்கு**
**மாற்றுகிறது**

அது சரி..
இன்னும்
என்னென்ன
மாற்றங்களோ...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்